<table>
<tr><td colspan="2">DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai</td></tr>
<tr><td colspan="2">Date: 02.07.2026</td></tr>
<tr><td colspan="2">CC No. 304/2025</td></tr>
<tr><td colspan="2">சாட்சி :PW2</td></tr>
<tr><td>பெயர் : திரு. அய்யாக்கன்னு</td><td>ஜாதி :</td></tr>
<tr><td>த/பெ/க/பெ. : திரு. பொன்னுகவுண்டர்</td><td>தொழில் : விவசாயம்</td></tr>
<tr><td>கிராமம் : வையம்பட்டி</td><td>சமயம் :</td></tr>
<tr><td>தாலுக்கா :</td><td>வயது : 55 /2026</td></tr>
<tr><td colspan="2">( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்)</td></tr>
</table>

---------------------------------------------------------------

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விபத்தில் இறந்த போன செல்வம் என்பவரை தெரியும். அவர் எங்களது ஊரில் பெண் எடுத்திருந்தார். 21.09.2023 அன்று மணப்பாறைக்கு சொந்த வேலைக்காரணமாக நானும், செல்வமும் புத்தாநத்தலிருந்து 09.00 மணிக்கு கிளம்பி மணப்பாறை வந்து வேலையை முடித்துவிட்டு மணப்பாறையிலிருந்து 11.00 மணிக்கு புத்தாநத்தம் செல்வதற்காக எனது TN 32 0063 என்ற பதிவெண் கொண்ட இருசக்கரவாகனத்தில் சென்றோம். நாங்கள் மணப்பாறையிலிருந்து புத்தாநத்தம் ரோட்டில் மணப்பாறை –புத்தாநத்தம் சாலையில் சென்றுகொண்டிருந்தோம். நாங்கள் பிள்ளையார்கோவில்பட்டி தாண்டி அம்மைப்பன் கோவில் அருகில் தெற்கு நோக்கி ரோட்டின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்தேன். அப்போது பின்னால் வந்த ஈச்சர் வேன் டமாரான எனது இருசக்கரவாகனத்தில் மீது மோதியது. எங்களுக்கு முன்பாக எந்த வாகனமும் வரவில்லை. அந்த வாகனம் வந்த வாக்கில் எங்களது வாகனத்தின் மீது மோதியது. மேற்படி வாகனம் ஹாரன் அடிக்கவில்லை. எனது வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தில் எனக்கு வலது கை, தலை, கால் உள்ளிட்ட பகுதிகளில் காயம் ஏற்பட்டது. நான் செல்வத்தை தூக்கிபார்த்த போது வலது தோள்பட்டையில் இரத்தக்காயம் ஏற்பட்டிருந்தது.

எங்களது இருசக்கரவாகனத்தின் மீது மோதிய ஈச்சர் வாகனத்தின் பதிவு எண். 7167 ஆகும். ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் லாரியை ஓட்டி வந்த நபர் ஆவார். ஆஜர் எதிரியின் பெயர் செந்தில்குமார் என பின்பு தெரியவந்தது. காயமடைந்த என்னை மற்றொரு ஆம்புலன்சில் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். செல்வத்தை காயத்தோடு சம்பவ இடத்தில் பார்த்தேன். மருத்துவமனையில் வந்த பின்பு விசாரிக்கையில் செல்வம் இறந்துவிட்டதாக தெரியவந்தது. நான் மணப்பாறை அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய போதி வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.